
# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார்! ரஷ்யாவுக்கான முன்னாள் தூதர் உதயங்க கருத்து

## அவரது செயற்பாடுகள் மீது நம்பிக்கை இல்லையாம்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போட்டியிடமாட்டார், என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் மீது தனக்கு நம்பிக்கை இல்லை, என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்துள்ள அவர், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான தற் போதைய ஜனாதிபதியின் திறன் குறித்து தனக்கு சிறிதளவும் நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமே காரணம் என தெரிவித்துள்ள உதயங்க, 2015 முதல் 2019 வரை கடன் பெருமளவிற்கு அதிகரித்தமைக்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம் எனவும் குறிப்பிட்டார்.

எஸ்தோனியாவில் இருந்து இலங்கைக்கு நேரடி விமானம் ஒன்று நேற்று முதல் முறையாக இயக்கப்பட்டது. அதன்படி 117 பயணிகளுடன் ஞமலரீ விமானம் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 03 வியாழக்கிழமை 21.12.2023 கதிர் 141

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## நாளையுடன் பாடசாலைகளுக்கு விடுமுறை பெப்ரவரி முதலாம் திகதி மீண்டும் ஆரம்பம்

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணையின் முதல் கட்டம் நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவடைவதாக கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளது.

இதன்படி மூன்றாம் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் மாசி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு பொருந்தும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



## யாழ் மாவட்ட செயலகத்திலும் டெங்கு சிரமதான நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் சுற்று சூழலிலும் டெங்கு சிரமதான நடவடிக்கை இன்றையதினம் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம், பல்கலைக்கழக விடுதிகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அழைப்பு விடுத்திருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.நாளையதினமும் (22) விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.(01)

## தபால் அலுவலகங்கள் 24 மணி நேரமும் திறப்பு முன்னோடித் திட்டம் மேல் மாகாணத்தில் ஆரம்பம்

பொதுமக்களுக்கு 24 மணிநேரமும் தபால் சேவைகளை வழங்குவதற்காக தபால் நிலையங்களைத் திறந்து வைக்கப்பதற்கு தபால் திணைக்களம் தீர்மானித்து. இதற்கான முன்னோடித் திட்டம் மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்த தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, பத்தரமுல்ல, தெஹிவளை, மொரட்டுவை, கொம்பனி வீதி, ஹெவ்லொக் டவுன், வெள்ளவத்தை, களுத்துறை, பொரளை, கொட்டாஞ்சேனை, நுகேகொடை, கல்கிசை, பாணந்துறை மற்றும் சீத்தக்கபுர ஆகிய பிரதேசங்களிலுள்ள தபால் நிலையங்களை 24 மணிநேரமும் திறந்திருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்து விதிகளை மீறும்வாகன ஓட்டுனர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை இவ்வாறு திறந்திருக்கும் தபால் நிலையங்களில் செலுத்துவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் 2 ➤

## இமயமலைப் பிரகடனத்துக்கு எதிராக விமல் போர்க்கொடி



இமயமலைப் பிரகடனம்பயங்கரமானதுஎன்று விமர்சித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் சமாதான உடன்படிக்கை தோல்வி அடைந்தது. இதனால் இலங்கையைப் பிரிக்க முடியாமல்போனது. ஆனால், சூடானைப் பிரித்தனர். இலங்கையைப் பிரித்திருந்தால், ஈழத்துக்கு அப்பாற்பட்ட பகுதியில்தான் தெற்காசியாவின் காசா பகுதி அமைந்திருக்கும். பாலஸ்தீன மக்களுக்கு இன்று நடப்பதுதான் சிங்கள மக்களுக்கு நடந்திருக்கும். இதுதான் உண்மைக் கதை.

சமாதான முயற்சி ஏன் தோல்வி அடைந்தது 2 ➤

## நத்தாரில் 'கேக்' விற்பனை 50 வீத்தினால் சரிவடைவு

நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணாமாக, இம்முறை நத்தார் பண்டிகையில் கேக் விற்பனை ஐம்பது சதவீதம் குறைந்துள்ளது என பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

வழமையாக பண்டிகைக் காலங்களில் ஒரு கிலோ கேக்கை வாங்கும் நபர்கள் இம்முறை அதனை இருநூற்றி ஐம்பது கிராமுக்கு மட்டுப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த கொரோனா பெருந்தொற்றின் பின்னர் நடைபெற்று வந்துள்ள நத்தார் கொண்டாட்டங்களின்போது பல கிறிஸ்தவ இல்லங்களில் நத்தார் கேக்குகள் தயாரிப்பது கூட நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரெதி-17)

## மின்சார சபை ஊழியர்களுக்கு இம்முறை போனஸ் இல்லை!

### அமைச்சர் காஞ்சன அறிவுறுத்தல்



இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு இந்த வருடத்திற்கான போனஸ் அல்லது ஏனைய கொடுப்பனவு களை வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இது குறித்து மின்சார சபையின் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 3 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் 25 சதவீத சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்துள்ளார். 2 ➤

# கீரி சம்பாவை ஒத்த 50,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 21

கீரி சம்பா அரிசியை ஒத்த வகையிலான 50,000 மெட்ரிக் தொன் அரிசியை தனியார் துறை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சந்தையில் அரிசி விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக உணவுக் கொள்கைக் குழுவின் பரிந்துரையின்படியே, 50,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசி மற்றும் சம்பா அரிசியின் விலையில் போட்டி நிலையை ஏற்படுத்தி, அதன் பயனை பாவனையாளர்கள் அனுபவிக்கும் நோக்கிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, இவ்வாறு கீரி சம்பா அரிசிக்கு நிகரான 50,000 மெட்ரிக் தொன் அரிசியை தனியார் மூலம் இறக்குமதி செய்வதற்கான அனுமதி கோரி வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமையவே அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெதி-20)

# நாளையுடன் பாடசாலைகளுக்கு விடுமுறை பெப்ரவரி முதலாம் திகதி மீண்டும் ஆரம்பம்

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணையின் முதல் கட்டம் நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவடைவதாக கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளது.

இதன்படி மூன்றாம் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் மாசி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு பொருந்தும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# SLIM Brand Excellence Awards 2023
# ஹெய்லிஸ் சோலாருக்கு 2 விருதுகள்!




SLIM Brand Excellence Awards 2023 விருது வழங்கும் விழாவில் ஹெய்லிஸ் சோலார் இரண்டு மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளது.

இந்த விருதுகள் பிரகாசமான, பசுமையான எதிர்காலத்திற்கான தமது அர்ப்பணிப்பையும், சோலார் திட்டங்களில் புதிய கண்டுபிடிப்புகளையும் அத்துறையில் தமது அசைக்க முடியாத முயற்சியையும் கௌரவப்படுத்தியுள்ளதாக ஹெய்லிஸ் சோலார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மின்சார சபை ஊழியர்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மின்சார சபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள், கொடுப்பனவுகள் மற்றும் அதிகாரிகள் வாடகை அடிப்படையில் பெற்றுள்ள வாகனங்கள், வாகனங்களுக்கு இதுவரை வாடகையாக செலுத்தப்பட்டுள்ள பண விபரங்கள் பற்றிய அறிக்கையை தமக்கு வழங்குமாறும் அமைச்சர் காஞ்சன மின்சார சபைத் தலைவருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ரெதி-19)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# பெரிய வெங்காய விலை கிடுகிடுனெ உயர்ந்தது!

நேற்றைய தினம் கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை 520 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்தியா வெங்காய இறக்குமதிக்குத் தடை விதித்துள்ள நிலையில், பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையே குறித்த விலை அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை, 700 ரூபாயைத் தாண்டும் எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினம் பல சில்லறை விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 600 முதல் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

## இமயமலைப் பிரகடனத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது குறித்து நோர்வே ஆராய்ந்தது. பேராசிரியர்களால் 140 பக்கங்களில் அறிக்கையொன்று வழங்கப்பட்டது. தோல்விக்கான காரணங்கள் அதில் விவரிக்கப்பட்டிருந்தன.

சமஷ்டி ஆதரவு போக்கில் இருந்த சந்திரிக்கா அம்மையாரின் ஆதரவைப் பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க அப்போதைய பிரதமர் (ரணில் விக்கிரமசிங்க) தவறியமை முதல் காரணம்.

இலங்கையில் பிக்கு சமூகத்தின் ஆதரவைத் திரட்ட தவறியமை இரண்டாவது காரணமாகும். அதாவது பிக்குகளின் ஆதரவைத் திரட்ட உரிய வேலைத்திட்டமொன்று இருக்கவில்லை என முழுமையாகக் கூறவும் முடியாது. சில பிக்குகள் இருக்கவே செய்தனர்.

தற்போதுகூட டயஸ்போராக்கள், சில பிக்குகளைப் பிடித்துக்கொண்டு இமயமலைப் பிரகடனம் எனும் திட்டமொன்றை முன்னெடுக்கின்றனர். ரணில் கூறும் 13 இற்கு அப்பால் என்ற யோசனையை விடவும் மிகவும் பயங்கரமான திட்டத்துடன் மீண்டும் வந்துள்ளனர்.

ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவின் ஆதரவு இருக்கவில்லை எனவும் காரணம் கூறப்பட்டிருந்தது. ஆனால், இன்று ஜே.வி.பியிடம் தேசியவாதம் இல்லை. ஊழல் எதிர்ப்புப் பற்றி மாத்திரமே குரல் எழுப்புகின்றனர். சந்திரிகாவும், ரணிலும்கூட நட்புடன் செயற்பட்டு வருகின்றனர் - என்றார். (அ)

## தபால் அலுவலகங்கள் 24 மணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள தபால் நிலையங்களில் மாலை 6 மணிக்கு பின்னரும் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெதி-18)

## ஜனாதிபதித் தேர்தலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமான சேவை குறித்து கருத்து வெளியிட்டுள்ள உதயங்க வீரதுங்க, வாரத்திற்கு 5 விமானங்கள் மூலம் 6 நாடுகளைச் சேர்ந்த 16,500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என்றும் இதனால் 25 மில்லியன் டொலர்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (04)

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கற்பிட்டி கண்டல்குழி கடலில் வெளிநாட்டு பிரஜைகளால் விடப்பட்ட ஆமைக் குஞ்சுகள்





(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கண்டல்குழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் நேற்று புதன்கிழமை (20) மாலை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளினால் கடலில் விடுவிக்கப்பட்டன.

கற்பிட்டி கண்டல்குழி கடற்கரையில் ஆமைகளால் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து குஞ்சு பொரித்த பின்னர் அவை கடற்கரையில் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்து பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டு 45 நாட்களின் பின்னர் முட்டையிலிருந்து 27 ஆமைக் குஞ்சுகள் வெளியில் வந்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது, புதன்கிழமை மாலை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்திற்குச் சென்று குறித்த 27 ஆமைக் குஞ்சுகளை பாதுகாப்பாக கடலில் விட்டனர். குறித்த கடலாமை அரியவகையான மஞ்சள் நிறச் சிற்றாமை வகையைச் சேர்ந்தது என கற்பிட்டி கண்டல்குழி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

## பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் நிறுவன பாராட்டு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின், தர முகாமைத்துவப் பிரிவின் ஒருங்கிணைப்பில் நடாத்தப்பட்டு வரும், பிராந்தியத்திலுள்ள சுகாதார நிறுவனங்களின் தர மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்த சிறந்த ஊழியர்களைப் பாராட்டும் விழாக்களின் தொடராக, கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் நிறுவன ரீதியான பாராட்டு விழா நேற்று இடம்பெற்றது.

பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.என்.எம். தில்ஷான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டாக்டர்.ஸக்கீலா இஸ்ஸடீன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம். ஹில்மி மற்றும் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.ஸி.எம். மாஹிர் அவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரிவின் சிறந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



## திருமலை சேகர மெத்தடிஸ்ட் தேவாலய பகிர்வோம் மகிழ்வோம் நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை சேகர மெத்தடிஸ்ட் தேவாலயம் சார்பில் பகிர்வோம் மகிழ்வோம் நிகழ்ச்சி தம்பலகாமம் செயலாளர் பிரிவில் பாடசாலைகளை உள்ளடக்கி அண்மையில் இடம்பெற்றது.

ஜெயபுர சிங்கள வித்தியாலயம், சிவசக்தி தமிழ் கலவன் பாடசாலை மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண தமிழ் வித்தியாலயம் (திருகோணமலை) ஆகியவற்றுக்கு இதன்போது பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மெதடிஸ்த தேவாலயங்களின் சேகர முகாமை குரு அருள் பணிதிரு. எஸ்.டபிள்யூ. தேவகுமார், அருள் பணிதிருமதி. டெய்சி தேவகுமார், அருள் பணிதிரு.சுயதாசன், தேவாலய ஊழியர்கள், உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

திருகோணமலை மெதடிஸ்த தேவாலயங்களின் உறுப்பினர்கள் மேற்படி பாடசாலைகளின் மாணவர்களுக்கு ரூபா ஒரு லட்சத்து அறுபதாயிரம் பெறுமதியான பாடசாலை உபகரணங்களை விநியோகித்தனர்.



## காரைதீவில் தேசிக சிவாக்கிர சுவாமிகள்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு, டிசெ. 21

இந்தியாவில் இருந்து வருகை தந்த அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கிர தேசிக சுவாமிகள் காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலயத்திற்கு செவ்வாய்க்கிழமை சென்றிருந்தார்.

அவரது வருகையை முன்னிட்டு அப்பிரதேச ஆலய நிர்வாகமும் பிரதேச மக்களும் இன்முகத்துடன் அவரை வரவேற்று கௌரவித்தனர். அதனைத்தொடர்ந்து சுவாமியின் அருளுரை இடம்பெற்றது.

நிகழ்வின்போது அனைவருக்கும் திருவாசகம் நூல் விநியோகிக்கப்பட்டது.



# ராமர் கோயில் மூலவர் பிரதிஷ்டை விழா தமிழ் மொழியிலும் அறிவிப்புப் பலகை



இந்தியாவில் ராமர் கோயில் மூலவர் பிரதிஷ்டை விழாவில் பங்கேற்க வரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு மொழிகளில் அறிவிப்புப் பலகைகள் வைக்க வுள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உத்தரப் பிரதேசம், அயோத்தியில் ராம ஜென்மபூமியில் பிரம்மாண்டமான கோயில் எழுப்பப்பட்டுவருகிறது. மூலவர் ராமர் சிலை ஜனவரி 22 ஆம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. அதை யொட்டி இந்தியா முழுவதிலுமிருந்து மதத் தலைவர் கள், பிரபலங்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் அயோத்தி வரவுள்ளனர்.

இந்த நிலையில், அயோத்தியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக லக்னௌ மண்டல காவல்துறை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

“ராமர் கோயில் மூலவர் பிரதிஷ்டை விழாவின் போது அயோத்தியில் பக்தர்கள் பெருமளவு சாலைக ளில் பாதயாத்திரையாக வருவார்கள் என்பதால், போக்கு வரத்துக்கு தடை விதிக்கப்படும். சில சாலைகளில் ஆட் டோக்களுக்கும் தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து பக்தர்கள் அயோத்திக்கு வரவுள்ளதால், அவர்களின் வசதிக்காக நகரின் பல்வேறு இடங்களில் வழிகாட்டிப் பலகைகளும், அறிவிப்பு பலகைகளும் வைக்கப்பட வுள்ளது.

ஹிந்தி, ஆங்கில மொழிகளுடன் நாட்டில் அதிகமாக பேசக்கூடிய தமிழ், தெலுங்கு போன்ற பிற மொழிகளிலும் வழிகாட்டிப் பலகைகள் வைக்கப்படவுள்ளது” என்று காவல்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ராமர் கோயில் மூலவர் பிரதிஷ்டை விழாவில் இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், தொழிலதிபர்கள், சினிமா, விளை யாட்டு பிரபலங்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா திரிபு மாநிலங்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் புதிதாக 358 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள னர். தற்போது, இந்தியா முழுவதும் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருபவர்களின் மொத்த எண்ணிக்கை 2,669 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

சுகாதாரத்துறையின் தகவலின்படி, கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றால், கேரளாவில் 3 பேர், கர்நாடகாவில் 2 பேர், பஞ்சாப்பில் 1 என மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி, இதுவரை தொற்று பாதிப்பால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5,33,327 ஆக அதிகரித்துள்ளது. தொற்று பாதிப்பில் இருந்து மீண்டவர்களின் சதவீதம் 98.81 ஆக உள்ளது எனத்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கேரளாவில் 79 வயது மூதாட்டி ஒருவ ருக்கு உருமாறிய ஜேஎன்.1 வகை கொரோனா தொற்று கடந்த சிலநாட்களுக்கு முன் கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் மகாராஷ்டிராவில் ஒருவரிடமும் கோவாவில் 19 பேரிடமும் கண்டறியப்பட்டுள்ளது. சிங்கப்பூர் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் கொரோனா தொற்று பர வுவதற்கு புதிய ஜேஎன்.1 வகை திரிபே காரணமாக கூறப்படுகிறது.

கொரோனா தொற்று மீண்டும் பரவி வருவதை கருத்தில்கொண்டு இந்திய மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக்மாண்டவியா தலைமையில் டெல்லியில் புதன் கிழமை உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்குப் பின்னர் அமைச்சர் மாண்டவியா கூறுகையில், “மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆனால் பீதியடையத் தேவையில்லை. நமது தயார் நிலையில் எவ்வித தளர்வும் இல்லை. பொது சுகா தாரம் என்று வரும்போது எவ்வித அரசியலுக்கும் இடமில்லை. கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு மத்திய அரசு முழு உதவிகள் அளிக் கும். பாதிக்கப்பட்ட மாநிலங்கள் தயார்நிலையை உறுதி செய்ய ஒவ்வொரு மருத்துவமனையிலும் 3 மாதத்துக்கு ஒரு முறை கொரோனா தடுப்பு ஒத்திகை நடத்த வேண்டும்” என்று தெரிவித்தார். (04)

## தானியங்கி இயந்திரங்களை மட்டுமே கொண்டு செயல்படும் உணவகம் அமெரிக்காவில் திறப்பு




முழுக்க முழுக்க தானியங்கி இயந்திரங்களை மட்டுமே கொண்டு செயல்படும் உணவகம் அமெரிக்கா வின் கலிபோர்னியாவில் திறக்கப்பட்டுள்ளது.

முழுவதும் தானியங்கி இயந்திரங்கள் நடத்தும் உலகின் முதல் உணவகம் என்ற பெருமையைப் பெற் றுள்ளது இந்த உணவகம்.

கலிபோர்னியா மாகாணத்தின் பசடேனா பகுதி யில் கலி எக்ஸ்பிரஸ் என்ற தானியங்கி இயந்திரங்கள் நடத்தும் உணவகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவில் தானியங்கி சமையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் மிஸோ ரோபோட்டிக்ஸ், கலி குழுமம் மற்றும் பணப் பரிமாற்றத்திற்கு உதவும் பாப் ஐடி ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த உண வகத்தை சாத்தியப்படுத்தியுள்ளன.

இந்த உணவகத்தில் மிஸோ ரோபோட்டிக்ஸ் இயந்திரங்கள் ருசிகரமான உணவுகளைத் தயார் செய்கின்றன. வாடிக்கையாளர்கள் கோரிக்கைக்கு ஏற்பவும் உணவுகளை சமைக்கின்றன.

அதிநவீன தொழிநுட்ப தானியங்கி இயந்திரங்கள் மூலம் கிரில் கோழிக்கறி, எண்ணெயில் பொரித்த உணவுகள் சமைக்கப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் பணப்பரிமாற்றத்திற்காக பாப் ஐடி தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. வாடிக்கையாளர்களை புகைப் படம் எடுத்துக்கொள்வதால் அவர்களின் வங்கிக் கணக்கிலிருந்து உணவுக்குத் தேவையான பணம் பெறப்படுகிறது.

உணவுகளுக்கான ஓடர் பெறுவது, சமைப்பது, பரி மாறுவது என அனைத்தும் தானியங்கி இயந்திரங்கள் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படுவதால், பலரின் கவ னம் இந்த தனியங்கி இயந்திரங்கள் நடத்தும் உணவ கத்தின் மீது திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. (04)

## ஹமாஸ் அமைப்பின் முக்கிய மையத்தை கண்டுபிடித்ததாக இஸ்ரேல் தெரிவிப்பு

இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கு இடையேயான போர் 20,000 த்திற்கும் அதிகமான மக்களைக் கொன்று குவித்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் உடனடியாக போர் நிறுத்தம் செய் யுமாறு உலகநாடுகளின் வலியுறுத்தல்கள் வலுத்துள்ள நிலையில், ஹமாஸ் அமைப்பினரின் முக்கியமான மையத்தைக் கண்டுபிடித்திருப்பதாக இஸ்ரேல் தெரிவித் துள்ளது.

இந்தக் கட்டளை மையத்தைக் கண்டுபிடித்தமை, இஸ்லாமிய போராளி அமைப்புகளை ஒழித்துக்கட்டுவதில் மிக முக்கியமான படி என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஆயுதங்கள் மற்றும் ராணுவப் பொருள்களைக் கடத்து வதற்கு பயன்படுத்தும் சுரங்கப்பாதைகளின் மையமாக இது இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினருக்கு மிக முக்கியமான இந்தச் சுரங்கப்பாதைகளை அழிப்பதே நடத்தப்படும் தாக்குதல்களின் முக்கிய நோக்கம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஹமாஸின் முக்கிய தலைவர் மற்றுமொரு தற்கா லிகப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி கைதிகளை பரிமாற் றுவதற்கான பேச்சு வார்த்தைகளுக்காக எகிப்திற்கு சென்றுள்ள நிலையில், போரில் தனக்கு முன்னேற்றம் கிடைத்திருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்துவரும் அமெரிக் காவும் தாக்குதல்களைக் குறைத்துக் கொள்ளுமா றும், பொதுமக்களைப் பாதுகாக்குமாறும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இஸ்லாமியப் போராளி அமைப்புகளை அழிக்காமல் இந்தப் போரை நிறுத்தப்போவதில்லை என இஸ்ரேல் தெரிவித்துவந்தது. சண்டையில் சொந்த நாட்டுக் கைதி களை இஸ்ரேல் கொன்றதாகச் செய்திகள் வெளிவந்த பின்னர் உலக நாடுகள் அனைத்தும் இஸ்ரேலைப் போரை நிறுத்துமாறு வலியுறுத்தி வருகின்றன. (04)

## கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார சுயதொழில் உபகரணங்கள்





(ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலக பகுதிக் குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிக்கான சுயதொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.ஹனி தலைமையில் இன்று பிரதேச செயலக வளாகத்தில் வைத்து அவை கையளிக்கப்பட்டன.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ்பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் விதவைகளுக்கான சுய தொழில் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இத் திட்டம் நடை முறைப்படுத் தப்பட்டு வருகிறது.

இதில் கணக்காளர், நிர்வாக உத்தி யோகத்தர், தலைமை முகாமையாளர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை ஆங்கில தின நிகழ்வு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை வலய கல்வி அலுவலகத் தின் அனுசரணையில் ஆங்கில தின நிகழ்வு கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் நடைபெற்றது

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை பாடசாலையின் ஆங் கில பாட இணைப்பாளர் ஏ.எல்.றியாஸ் நெறிப்படுத்தியிருந்தார் .

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வலய கல்வி அலுவலகத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி எம்.எச். றியாஷா, கௌரவ அதிதியாக உதவி கல்வி பணிப் பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளருமான என்.எம்.மலிக், உதவி கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட் டக்கல்வி பணிப்பாளருமான யூ.எல். றியால், உதவி கல்வி பணிப்பாளர் திருமதி ஏ.ஏ. மலிக் ஆகியோரும், விசேட அதி திகளாக வலய கல்வி அலுவலகத்தின் ஆங்கில வளவாளர் ஏ.எல்.எம்.ஆரிப், வலய கல்வி அலுவலகத்தின் வழிகாட்டல் ஆலோசனை பிரிவு வாளவாளர்

யூ.எல்.சபீல் ஆகியோரும் அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ. சலாம், திருமதி ஈ. றினோஸ் ஹஜ்மீன், உதவி அதிபர் திருமதி யூ.எல். ஹிதாயா, பாடசாலை பழைய மாணவர் சங்க செய லாளர் யூ.எல். ஹாஜா ஆகியோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.



# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மீண்டும் பார்வையாளர் அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மீண்டும் பார்வையாளர் அனுமதிப் பத்திரம் (பாஸ்) முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாக போக்கு வரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த் தொற்றுக்கள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன ஏற்படுவதன் காரணமாக நேற்று செவ்வாய் கிழமை(19)தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது ஒரு நோயாளருக்கு தலா இரு அனுமதிப்பத்திரம் எனும் அடிப்படையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறப்பான நோய்ப்பராமரிப்பு வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஒழுங்கு முறைக்கு அனைத்து பார்வையாளர்களும் ஒத்துழைப்பினை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு





களுவாஞ்சிகுடி, டிசெ.21
(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடியில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் சாதாரணதரப் பரீட்சையில் 9ஏ சித்திபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் ரீ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளுக்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். ஜீ.சுகுணன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.செந்தூரன், சட்டத்தரணிகள் ஆர்.றமணா, கே.கிருபாகரன், கல்முனை பிராந்திய விற்பனை முகாமையாளர் எஸ்.சேகர், களுவாஞ்சிகுடி மக்கள்வங்கி முகாமையாளர் ட.தனசாகரன், ஆகியோர் கௌரவ அதிதியாகளாகவும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், உறுப்பினர்கள் பெற்றோர்கள் பழையமாணவர்கள் மற்றும் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோவிலில் திருவெம்பாவை

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் பணிப்பாளர் கண இராஜரெத்தினம் (கண்ணன்) தலைமையில் தினமும் திருவெம்பாவை பூசை நடைபெற்றுவருகிறது.

இப்பூசையில் இளையவர்களும் ஆர்வத்தோடு கலந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)

# புத்தல பிரதேசத்தில் விவசாய இளைஞர் மீது கரடி தாக்குதல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மொனராகல, புத்தல பிரதேசத்தில் நிலக்கடலை விவசாய காணியிலுள்ள குடிசையில் வசித்து வந்த இளைஞரொருவர் கரடி தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டொக்டர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தல - கதிர்காமம் வீதிக்கருகில் உள்ள நிலக்கடலை தோட்டத்திலுள்ள குடிசையில் நண்பர்களுடன் இருந்த போது திடீரென குடிசைக்குள் நுழைந்த கரடி அங்கிருந்தவர்கள் மீது பாய்ந்து கடித்து குதறியுள்ளது. சிலர் அருகிலிருந்த மரத்திலேறி தப்பியுள்ளனர். பின்னர் நண்பர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கரடியை அடித்து விரட்டியுள்ளனர்.






## புத்தளம் முன்னால் நகரபிதா ரபீக் ஆளுநரின் விசேட இணைப்பாளர்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் முன்னால் நகரபிதா எம்.எஸ்.எம் ரபீக் புத்தளம் மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்கான வடமேல்மாகாண ஆளுநரின் விஷேட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களுக்கான விஷேட கூட்டம் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே, வடமேல்மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வடமேல் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் அனைவரும் அவர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் ஆளுநரின் விஷேட இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, புத்தளம்நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக், புத்தளம்நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான ஆளுநரின் இணைப்பாளராக செயற்படுவார்.

அத்துடன், பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்வது, ஆளுநரின் புத்தளம் விஜயத்தை ஒழுங்குபடுத்துவது, அபிவிருத்தி திட்டங்களுக்கான திட்ட மொழிவுகளை முன்வைப்பது போன்ற பணிகள் ஆளுநரின் இணைப்பாளர்களுக்குரிய அதிகாரங்களாக வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, ஆளுநரின் இணைப்பாளர்களான உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களுக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் அளவில் சிறிய அளவிலான அபிவிருத்தி பணிக்காக மாகாண ஆளுநரினால் 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருகோணமலை நிலாவெளி புறாத் தீவு பூட்டப்பட்டது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை நிலாவெளி கடற் பகுதியில் அமைந்துள்ள புறாத் தீவு தேசிய பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது .

வடகிழக்கு பருவமழை ஆரம்பமாகியுள்ள நிலையில் கடலில் கொந்தளிப்பு ஏற்படுவதோடு அலையின் வேகமும் அதிகரித்து காணப்படுவதால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி இறுதி வரை இந்த நிலமை நீடிக்குமென்றும் இதற்கிடையில் கடல் சீரடையும் சில நாட்களில் சுற்றுலா பயணிகள் தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படலாம் என்றும் உயர் அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

# JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store



**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2023இல் வெளியிடப்பெற்றது.